மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக வற்புறுத்தப்படும்.

திரு. தே. ஞானசிகாமணி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பரளியாறு திட்டம் இதோடு சேர்த்துக்கொள்ளப் பட்டதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, பரளியாறு திட்டம் 35 மெகாவாட் திறனுடன் சராசரியாக ஆண்டில் 100 மில்லியன் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடியது. இத்திட்டத்தை விட இன்னும் சிறப்பான திட்டங்களை வற்புறுத்தவேண்டி இருப்பதனால் இத்திட்டத்திற்காக மத்திய அரசாங்கத்தினை மீண்டும் வற்புறுத்தும் உத்தேசம் தற்பொழுது இல்லை.

திரு. இ. தமிழரசன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ்நாடு முழுவதும் மின் விசை உற்பத்தி செய்ய தமிழக அரசிடம் எத்தனை ஆய்வுகள் இருக்கின்றன? மத்திய சர்க்கார் எத்தனை அனுமதித்திருக்கிறார்கள்? குறிப்பாக, வட ஆற்காடு மாவட்டத்தில் விவசாயத்திற்கும் வீடுகளுக்கும், மின் உற்பத்தி அத்தியாவசியமாகும் என்பதைக் கருத்தில் கொண்டு, அனல் மின் நிலையம் உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் விவரம் தர இயலும்.

மின் கட்டண நிலுவை

*வினா எண். 701—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டில் மின் கட்டண பாக்கியாக பத்து இலட்சம் ரூபாய்க்கு மேல் பாக்கி வைத்திருப்பவர்கள் யார் யார்?

(ஆ) அவர்களிடமிருந்து வசூல் செய்ய என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ)&(இ) பின்னி அண்டு கோ, மால்கோ, சக்தி பைப்ஸ், பிளாஸ்டிக் ரெசின்ஸ் அண்டு கெமிகல்ஸ், சன் பேப்பர் மில்ஸ், ஆகிய ஐந்து தொழில் நிறுவனங்கள் ஒவ்வொன்றும் பத்து இலட்சம் ரூபாய்க்கு

1979 ஏப்ரல் 16]

மேல் மின் கட்டணப் பாக்கி வைத்துள்ளன. மால்கோ நிறுவனம் உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்து, நிலுவைகளை வசூலிப்பதிலிருந்து தடை உத்தரவு பெற்றுள்ளது. மற்ற நிறுவனங்களிடமிருந்து மின் கட்டணப் பாக்கித் தொகையை வசூலிக்க மின் வாரியம் உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, ரூ. 10 இலட்சத்திற்கு மேல் இருக்கிறது என்று மொட்டையாக சொல்லப்பட்டிருக்கிறது. அது எவ்வளவு என்று அறிய நான் விரும்புகிறேன். அதோடு, இன்றைக்கு விவசாயிகளிடம் இருக்கக்கூடிய முக்கியமான பிரச்னை, இப்படி ஏராளமான பாக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அதே நேரத்தில் விவசாயிகள் ரூ. 10, ரூ. 20, ரூ. 50 பாக்கியிருந்தால், ஃப்யூஸ் எடுத்து விடுகிறார்கள் என்றெல்லாம் குறிப்பிடுகிறார்கள். அரசு தரப்பிலே சொல்லும்போது, இப்படிப்பட்ட பெரிய நிறுவனங்களிடம் பாக்கியில்லாமல் இருக்க முடியாது. ஏனென்றால், அங்கு ஃப்யூஸ் எடுத்தால், அங்கே இருக்கிற தொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்று சொல்லலாம். ஆனால், ஒவ்வொரு ஆண்டும் கறாராக வசூலிப்பதற்கு இப்பொழுதும் என்ன நடவடிக்கை என்று நான் அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, பின்னி கம்பெனியைப் பொறுத்தவரை 12,55,506 ரூபாய் பாக்கி. அக்டோபர் 76-லிருந்து பிப்ரவரி 77 வரை பாக்கி, பின்னி கம்பெனியில் வெள்ளம் வந்து புகுந்ததால் அப்போதிருந்த அரசு பரிசீலனை செய்து மூன்று ஆண்டுகளுக்கு அதைச் செலுத்த வேண்டியதில்லை என்று குறிப்பிட்டார்கள். ஆனால் இப்போது நான்கு மாதத் தவணைகளில் செலுத்த பின்னி அண்டு கம்பெனி ஏற்றுக்கொண்டு முதல் தவணையாக ரூ 3,13,836.65 பை செலுத்துவதாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். 'மால்கோ' வைப் பொறுத்தவரை 9—12—78 தேதி நிலவரப்படி 943·15 லட்சம் ரூபாய் பாக்கி இருக்கிறது. அவர்கள் கோர்ட்டுக்குச் சென்றிருக்கும் காரணத்தால் கோர்ட்டில் தடையுத்தரவு வழங்கியிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாகச் சொல்லப்பட்டிருப்பது ஜனவரியிலிருந்து மாதந்தோறும் அவர்கள் எவ்வளவு கட்டணம் கட்ட வேண்டுமோ அதை ஒழுங்காகக் கட்ட வேண்டுமென்றும், இதுபற்றிய தீர்ப்பு வருகிற வரை 'மால்கோ'வினுடைய சொத்துக்களை எந்த விதத்திலும் விற்கவோ, மாற்றவோ அவர்களுக்கு உரிமை இல்லையென்றும் ஹைகோர்ட் உத்தரவிட்டிருக்கிறது. சக்தி பைப்ஸ் பொறுத்தவரை அது ஏற்கனவே ஒரு ''சிக் இண்டஸ்ட்ரி'' என்ற வகையில்

வருகிறது. 1-12-78 அன்று மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது பிளாஸ்டிக் ரெசின் அண்டு கெமிகல்ஸ், சாகுபுரம், திருநெல்வேலி மாவட்டம்-33.44 லட்சம் ரூபாய் பாக்கி......

'Supply has been disconnected on 17-2-1978,

சன் பேப்பர் மில்ஸ் 11·79 லட்சம் ரூபாய் பாக்கி. அவர்கள் எட்டு தவணைகளில் கட்ட ஒப்புக்கொண்டு கட்டி வருகிறார்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : பின்னி கம்பெனிக்குள் வெள்ளம் புகுந்தது. ஆகவே, மூன்று வருஷம் வரை விதி விலக்கு என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். விவசாயிகளும் அதே போன்று புயலாலும், வெள்ளத்தாலும், வறட்சியாலும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படிப் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும் இரண்டு மூன்று வருஷங்களுக்கு விதிவிலக்கு கொடுக்க உத்தேசம் இருக்கிறதா? உத்தேசம் இல்லையென்று சொன்னால் அதற்கான காரணம் என்ன? அதன் காரணமாகத் தான் விவசாயிகள் தொடர்ந்து கிளர்ச்சி, போராட்டம் நடத்தக்கூடிய நிலைமை ஏற்படுகிறது என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்த அனுமதியைத் தந்தது ஆளுநர் ஆட்சிக் காலத்தில். ஆனால் பின்னி கம்பெனியைப் பொறுத்தவரையிலும் கூட அவர்கள் மூன்று ஆண்டுகள் வரை நிலுவையில் வைத்துக் கொள்ளவில்லை. அவர்களே நான்கு மாத தவணைகளில் அவற்றைக் கட்டுவதாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். பின்னி அண்டு கம்பெனியும் ஒரு சிக் மில்ஸ் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். இதையும் விவசாயிகள் பிரச்சினையையும் முடிச்சுப் போடுவது சரியல்ல. விவசாயிகள் மின் கட்டணத்தைக் கட்ட வேண்டாமென்று ஒரு இயக்கம் நடத்தப்படுகிறது. தொழில் நிறுவனங்களில் யாரும் கட்டணத்தைச் செலுத்தக்கூடாது என்று சொல்லி எந்தவிதமான போராட்டத்தையும் யாரும் நடத்தவில்லை.

திரு. துரை முத்துசாமி : தொழிலதிபர்கள் கட்ட வேண்டிய பாக்கியைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எத்தனை ஆண்டுகளாகக் கட்டவேண்டிய பாக்கி? மொத்தம் எவ்வளவு தொகை பாக்கி? விவசாயிகள் கட்ட வேண்டிய பாக்கி எவ்வளவு?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பத்து லட்சம் ரூபாய்க்கு மேல் பாக்கியுள்ள நிறுவனங்கள் எவ்வளவு என்பது கேள்வி. மொத்தம் எத்தனை நிறுவனங்கள் பாக்கி என்பதற்

1979 ஏப்ரல் 16]

கான விவரம் என்னிடத்தில் இல்லை. விவசாயிகளைப் பொறுத்தவரை ஏற்கனவே இந்த மன்றத்தில் பல நேரங்களில் சொல்லியிருக்கிறேன்.

திரு. என். பழனிவேல் : பத்து இலட்சம் ரூபாய்க்கு மேல் மின் கட்டணம் பாக்கி வைத்திருக்கக்கூடிய நிறுவனங்களின் லிஸ்டை அமைச்சர் அவர்கள் வாசித்தார்கள். அவர்களுக்கு மின்சாரம் என்ன விலைக்குக் கொடுக்கப்படுகிறது? அதோடு 10 லட்சத்திறகும் மேல் கோடிக் கணக்கில் பாக்கி வைத்திருப்பவர்கள் இருக்கிறார்களா?

மாண்புமிகு திரு, ச. இராமச்சந்திரன் : கோடிக்கணக்கில் பாக்கி என்று வருவது ஒரேஒரு நிறுவனம் தான். மால்கோ மட்டுந் தான். அதிலே கோடி, பீனல் லெவி, அபராதம் என்ற வகையில் 7 கோடி 19 லட்சம் ரூபாய் வருகிறது. மற்றவை கரெண்ட் சார்ஜ். பவர்கட் காலத்தில் அவர்கள் அதிகமாக மின்சாரத்தைப் பயன் படுத்தியிருக்கிறார்கள். அப்போதிருந்த அரசு அனுமதி தந்ததாகச் சொல்லுகிறார்கள். அனுமதி தந்ததா? என்பது பிரச்சினை. உள்ளே போக விரும்பவில்லை. வழக்கில் இருக்கிறது. அவர்கள் அப்படிச் சொல்லுகிறார்கள்— அனுமதி தந்ததால் அதிகம் பயன்படுத்தினோம் என்று 'மால்கோ' நிறுவனத்தினர் சொல்லு கிறார்கள். அதன் மூலம் அபராதம் என்ற வகையில் 7 கோடி 19 லட்சம் ரூபாய் வருகிறது. ஆகையால்தான் 9 கோடி ரூபாய் அளவுக்குப் போகிறது.

(முற்பகல் 9–20)

திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அதர்களே, இங்கே 10 லட்ச ரூபாய் பாக்கி வைத் துள்ளவர்கள் விவரம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழகத்தில் தருமபுரி மாவட்டத்தில் விவசாயிகள் பாக்கி வைத்து இருக்கிறார்கள். அதை 4 மாதமாக இப்போது அரசு தவணை முறையாக வசூலிக்க உத்தேசித்து இருக்கிறது. அதை ஒவ்வொரு மாதமும் சிறுகசிறுகத் தொகையாகக் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆணையிட முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அந்த மாதத்தில் ஆகும் கட்டணம் கட்டுகிறபோது, ஒவ்வொரு மாத அர்ரியர்ஸ் கட்டினால் போதும் என்று ஏற்கனவே உத்தரவு போடப்பட்டு இருக்கிறது. அது எளிதானதுதான்.

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 10 லட்ச ரூபாய் மின்சாரக் கட்டண பாக்கி வைத்து இருப்பவர்களைப் பற்றி இப்போது அமைச்சர் அவர்கள் தந்து

இருக்கிறார்கள். எவ்வளவு நாட்களில் இவ்வளவு அர்ரியர்ஸ் சேர்ந்து விட்டது? அத்தகைய அர்ரியர்ஸ் சேர்வதற்கு - அவ்வப் போது வசூலிக்காமல் ஏன் விட்டார்கள் என்பதற்குரிய தகவலைத் தருவார்களா என்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் விவசாயிகள் மின் கட்டணத்தை ஒவ்வொரு மாதமும் 21-ம் தேதிக்குள் கட்டவில்லையென்றால் டிஸ்கனெக்ஷன் செய் தார்களே, அந்த முறைகளை இந்தத் தொழில் அதிபர்களிடத்தில் ஏன் கடைபிடிக்கப்படவில்லை?

மாண்புமிகு திரு, ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, பாக்கியைப் பொறுத்தவரையில் அக்டோபர் 26 முதல் பிப்ரவரி 27 வரையில் மால்கோ நிறுவனத்தில் ஏற்பட்டு இருக்கிறது. முந்தைய ஆட்சி இருந்த நேரத்தில் ஏற்பட்டது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். சக்தி பைப்ஸ் பொறுத்த வரையில் எந்த ஆண்டு என்று இல்லை. ஆனால் 14·55 லட்ச ரூபாய்தான் பாக்கி. அதேபோல் ப்ளாஸ்டிக் பேசின் கெமிகல்ஸ் எப்போது என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால் அவ்வப்போது அவர்கள் மின் கட்டணத்தை செலுத்தாவிட்டால் மின்துண்டிப்பு செய்ய வேண்டும் என்று இந்த அரசு அறிவுறுத்தி வருகிறது. அதைச் செய்து வருகிறோம். ஏற்கனவே ஏன் வசூலிக்கவில்லை என்பதைப் பற்றி என்னிடத்தில் கேட்டு பயன் இல்லை.

Accounts of Queen Mary's College Hostel at Madras

*Q.No. 702: Thiru N. KITTAPPA: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether the accounts of the students hostel of the Queen Mary's College, Madras are audited by chartered accountants;

(b) if so, the methods adopted to select them;

(c) the names of the chartered accountants for the financial years 1975-76, 1977-78; and

(d) the remuneration paid to them?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(ஆ) சாசனக் கணக்கர்களிடமிருந்து மாணவியர் விடுதிக் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்கான மேற்கோள்களைக் Quatations) கோரிப் பெற்று, அதன் அடிப்படையில் அவர்கள் கல்லூரி முதல்வரால் நியமிக்கப்பெற்றனர்.